**பத்தேகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 13 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பத்தேகம பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 2,585,613 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட வேண்டும். | அறுதியான தகவல்கள் பெற்றுக்கொண்ட பின்னர் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | ரூபா 13,790,077 தொகை பெறுமதியான 64 நிலையான சொத்துக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணிப்பீடுகள் மேற்கொண்டு தகவல்களை பெற்று கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மீளாய்வாண்டின் போது 03 உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது மற்றும் நிர்மாண வேலை அபிவிருத்தி 04 சந்தர்ப்பங்களில் செலவழிக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 332,957 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தி இருக்கவில்லை | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | சபைக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்கள் இருவரிடம் பெற்றிருந்த ரூபா 260,820 இற்கான முற்பண கடன் மீதியை முத்திரைக் கட்டண வருமானத்தில் இருந்து பதிலீடு செய்திருந்த போதிலும், சபையினால் உரிய விதத்தில் கணக்குகளை சீராக்கல் செய்திருக்க வில்லை. | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டிருந்த 03 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 68,651,798 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(இ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 154,781,302 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 193 | பாதீட்டுடன் வரவு மற்றும் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகை மற்றும் பற்றாக் குறைகளை காட்டக் கூடிய கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் விதிகளின் பிரகாரம் செயற்பட்டு சரிசெய்வேன் |
| (ii) விதி 217 மற்றும் 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு இருக்காததுடன் படிவம் பீ.எஸ்46 இன் பிரகாரம் பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் விதிகளின் பிரகாரம் சரிசெய்வேன் |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 | 06 வாகனங்கள் தொடர்பான நாளாந்த அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் படி சரிசெய்வேன் |
| (இ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் | மாதாந்த தவணைப் பணம் உரிய நேரத்தில் செலுத்தாமையால் ரூபா 29.107 தொகைக்கான மிகைவிதிப்பு ஒன்று செலுத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,803,318 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,358,068 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,733,661 | 3,320,053 | 1,355,819 | 1,964,234 | 2,755,436 | 3,039,858 | 1,101,939 | 1,937,919 |
| வாடகை | 1,179,100 | 3,008,795 | 2,921,820 | 86,975 | 1,179,100 | 1,975,610 | 1,862,635 | 112,975 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,175,000 | 1,369,680 | 1,364,930 | 4,750 | 1,204,000 | 1,279,600 | 1,273,760 | 6,000 |
| | 5,087,761 | 7,698,528 | 5,642,569 | 2,055,959 | 5,138,536 | 6,295,068 | 4,238,334 | 2,056,894 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 5,087,761 தொகையாக இருந்ததுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 7,698,528 தொகையாக இருந்தது. சிட்டையிடப்பட்ட வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5,642,569 தொகை அதாவது 73 சதவீதமாகும். | சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் மற்றும் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 1,960,244 இற்கான கூடிய பெறுமதி ஒன்றினைக் கொண்டிருந்த போதிலும், ஆதனங்களை தடை செய்யும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த வாடகை மதிப்பீடு ரூபா 1,179,100 தொகை மற்றும் சிட்டையிடல் ரூபா 3,008,795 தொகையாகக் காணப்பட்டமையால் மதிப்பீட்டுப் பெறுமதியை விட கூடுதலாக ரூபா 1,829,695 தொகை சிட்டையிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டு வருமானத்தை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் சிட்டையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 2,274,093 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 76,055,373 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மாகுருகொடவத்த குப்பை முகாமைத் துவ நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணியின் அனுபவிக்கும் உரிமை சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிமையை உரித்தாக்கியிருக்க வில்லை. | காணியின் உரிமையை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணியின் உரிமை சபைக்கு உரித்தாக்கு வதற்கும் முறைப் பிரகாரம் குப்பை முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) சபையினால் குப்பை அகற்றல் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி வேலை செயற்தளத்திற் காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற வேண்டும் | எதிர்காலத்தில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **வீதி விளக்குகள் பராமரிப்பு** | | |
| (அ) சபை மீளாய்வாண்டிற்காக மின்சார சபையுடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்காமையால் ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டிய வீதி விளக்கு மீளளிப்புத் தொகை மின்சார சபையிடம் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற் கொண்டு அங்கீகரிக் கப்பட்ட வீதிவிளக்கு களுக்கான பணத்தை மீளளிப்புச் செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது மின்சார சபையுடன் உடன்படிக்கை மேற் கொண்டு வீதி விளக்குக் கட்டணங் களை மீளளிப்புச் செய்கின்றேன். |
| (ஆ) சபையினால் பராமரிக்கப்படும் வீதி விளக்குகளின் எண்ணிக்கை தொடர்பான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காததுடன், புதிதாக வீதி விளக்குகள் பொருத்தும் போது இலங்கை மின்சார சபை அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | வீதி விளக்குகள் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். | வீதி விளக்குகள் பதிவேடு ஒன்று பேணி வருவதற்கும், புதிதாக பொருத்துவதற்காக அங்கீகாரம் பெறுவத ற்கும் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதவியணி திட்டத்தில் மிகை ஊழியர் எண்ணிக்கை 15 தொகையும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 14 உம் காணப்பட்டது. | வெற்றிடப் பதவிகளுக்காக முறைசார் விதமாக ஆட்சேர்ப்பதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களுக்கான அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) | முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை இலக்கம் 25/2014 இற்கு இணங்காமல் மீளாய்வாண்டின் போது சேர்க்கப்பட்டு இருந்த அமைய, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த ஊழியர் 13 பேருக்கான சம்பளம் மற்றும் படிகள் ஆக ரூபா 3,114,331 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | நி.பி.71 இன் கீழ் எதிர்காலத்தில் முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

### (அ) கடைகள் நடாத்துதல் மற்றும் வரி அறவிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வந்துரம்ப பஸ் நிலையத்திற்கு முன்னால் இருக்கும் 03, 04 மற்றும் 08 ஆம் இலக்க கடைகள் மீளாய்வாண்டின் போதும் மூடப்பட்டு இருந்தது. | கடைகளை திருத்த வேலைகள் செய்து, உடன்படிக்கைகள் மேற்கொண்டு வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சரியாக வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | வந்துரம்ப மாபலகம பாதை வாராந்தச் சந்தை வளவில் 2,3,4,5,6 மற்றும் 8 இலங்கங்களை கொண்ட கடைகள் 2013 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் வாடகைக்கு கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடைகளை திருத்த வேலை செய்து, உடன்படிக்கை மேற்கொண்டு வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சரியாக வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (iii) | 2003 ஆண்டு முதல் வாடகை உடன்படிக்கை ஒன்று இன்றி இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்த மீன் விற்பனை நிலையம் மீளாய்வாண்டு ஜனவரி மாதம் முதல் மூடப்பட்டிருந்தது. அந்த வர்த்தக நிலையத்தை மீளாய்வாண்டு மே மாதம் 31 ஆந் திகதி மீண்டும் சபைக்கு உரித்தாக்கி இருந்த போதிலும் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை ரூபா 652,723 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | கடைகளை உடன் படிக்கைகளுடன் வாடகைக்கு கொடுப்பதற்கும் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டின் போது சரியாக வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) இந்திகஸ்கெடிய சேரி ஒழிப்பு வீடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாதாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கு கொடுத்திருந்த 07 வீடுகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டி இருந்த வாடகைத் தொகை ரூபா 99,486 ஆகக் காணப்பட்டதுடன், 2019 பெப்ரவரி 25 ஆந் திகதியில் உள்ளவாறு மேலும் ரூபா 67,486 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைத் தொகை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | மாதாந்த வாடகை நூறு ரூபாவை மேற்படாத வீடுகளை வீட்டு வாடகை தாரர்களுக்கு பெயரளவிலான பெறுமதிக்கு உரித்தாக்குவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரினால் 2017 ஆம் ஆண்டின் போது தகவல்கள் கேட்டிருந்த போதிலும், இது வரை அந்த வீடுகளை உரித்தாக்கி இருக்கவில்லை. | வீடுகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் கோரியுள்ள தகவல் களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | சேரிஒழிப்பு வீட்டு இலக்கம் 04 இன் உரிமை தொடர்பாக சிக்கல் ஏற்பட்டிருப்பதனால் சபையினால் வீட்டு வாடகை அறவிடுதல் நிறுத்தப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு மே மாதம் முதல் மாதாந்த வாடகை அறவிடப்பட்டி ருக்கவில்லை. | வீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சிக்கல்களை தீர்த்து விரைவாக நிலுவை யுடன் வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 24,928,666 தொகை பெறுமதியான மோட்டர் கிரேடரின் உரிமையை உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | சபைக்கு உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

**3.5.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2014 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 75,710 தொகை பெறுமதியான 05 டயர்கள் 2019 பெப்ரவரி 25 கணக்காய்வுத் திகதி வரை களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாது காணப்பட்டது, | தேவையினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |
| (ஆ) | பல்வேறு வகையை சேர்ந்த 22 டயர்கள் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 181,935 தொகை செலவொன்று மேற்கொள்ளப்பட்டு மீள்நிரப்புதல் (டெக் பண்ணல்) மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2019 பெப்ரவரி 25 திகதி வரை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | பயன்படுத்தப்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | டிரக்டர் டேலர் ஒன்றினை திருத்த வேலை மேற்கொள்வதற்காக 2016 ஜுன் 02 ஆந் திகதி உள்ளூராட்சி திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளர் அறிக்கை ஒன்று சமர்ப்பித்திருந்த போதிலும், அந்த டேலரை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். | திருத்த வேலைகள் விரைவாக மேற் கொள்வேன். |
| (ஈ) | வீதிவிளக்கு டிரக்டர் 2016 ஆண்டு முதல் வீதி விளக்கு திருத்த வேலைக்காக பயன்படுத்தப்படாமல் தலைமை அலுவலக வளவில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 4,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. | திருத்த வேலைகள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். | திருத்த வேலைகள் விரைவாக மேற் கொள்வேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடயம் ஒன்றின் பாதீட்டு வரையறையை மிகைத்து ரூபா 3,324,463 இற்கான செலவு மேற் கொள்ளப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி 21 சதவீதம் ஆகும். | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (ஆ) | குறிக்கோள் சார் கருமங்களுக்கு பயன்படுத்தப் படாமையால் ஒரு செலவு விடயத்தில் மொத்த நிதி ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டுள்ளது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக கவனம் செலுத்துவேன். |
| (இ) | 04 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 4,097,825 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அவை 32 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த ஆண்டு இது தொடர்பாக இலக்குச் செலவை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | புதிதாக பதவியணி அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தகுதியான உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்து உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வேன். |

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2009 ஜுன் 09 ஆந் திகதிய DMA/2009(i) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிப்பதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரியவாறு குழுக்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |